සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
*All Rights Reserved]*

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**II ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்காக நடைபெறும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (புதிய பாடத்திட்டம்) - 2017 (II) (2018)**

Second Efficiency Bar Examination for Assistant Superintendents of Customs Grade II (New Syllabus) - 2017 (II) (2018)

**(01)** சுங்க விதிகளும் பின்புலமும்

Customs Law and Background

மூன்று மணித்தியாலம்
Three hours

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**1.** இலங்கை சனநாயக சமூகவுடைமைக் குடியரசின் நியதிச் சட்டக்கோவையின் 235 ஆம் அதிகாரமாகிய சுங்கக் கட்டளைச் சட்டத்தில் காணப்படும் சரத்துகளுடன் சம்பந்தப்படும் துணை ஆவணங்கள் ஏழு மேற்குறிப்பிட்ட சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

(i) மேற்குறிப்பிட்ட துணை ஆவணங்கள் ஏழும் எவையெனக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) அதனோடு சம்பந்தப்படும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் தொடர்பாக சுருக்கமாக விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

**2.** சுங்கத்தின் கடமைப் பொறுப்புகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள அநேக குறிக்கோள்களில் பிரதானமானவைகளாக **நான்கு** குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) மேற்குறிப்பிட்ட **நான்கு** குறிக்கோள்களும் எவையென சுருக்கமாக குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) மேற்குறிப்பிட்ட பிரதானமான நான்கு குறிக்கோள்களுக்கு மேலதிகமாகக் காட்டப்பட்டுள்ள ஏனைய குறிக்கோள்கள் **ஐந்தினை** சுருக்கமாக குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(iii) மேலே கூறப்பட்ட பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும்போது சுங்கக் கட்டளைச் சட்டத்தில் மற்றும் அதனோடிணைவாக வேறு கட்டளைச் சட்டங்களில் காணப்படும் ஏற்பாடுகளை உரித்தாக்கிக் கொள்ளும் விதத்தை சுருக்கமாக எடுத்துக் காட்டுக. *(10 புள்ளிகள்)*

**3.** கீழே காட்டப்படும் விடயங்களில் **நான்கினைப்** பற்றி விளக்குக.

(i) சுங்க நுண் ஆய்வொன்றின் போது பொருட்களைப் பட்டியல் படுத்துதல்.

(ii) சுங்க கட்டளைச் சட்டத்திற்கமைய பிரமாணம் / உறுதிமொழி ஒன்றின் கீழ் சாட்சியம் ஒன்றைப் பெறுதல்

(iii) சுங்க விசாரணைக்கு முறைப்பாடொன்றை முன்வைக்கின்ற அதிகாரி

(iv) சுங்க விசாரணையொன்றின் முடிவில் சந்தேகத்துக்குரியவர்களின் விடுதலைக்காக விடயங்களை முன்வைப்பது பற்றிய அறிவித்தல்

(v) குற்றவியல் வழக்கு ஏற்பாடுகள் கோவையில் குறிப்பிடப்படுகிற "பீ" அறிக்கை *(05 × 4 = 20 புள்ளிகள்)*

**4.** இலங்கை சுங்கப் பிரிவுக்கென மரபுவழிசார்ந்த முறைசார் விசாரணையொன்றை நடத்துவதற்கான நுட்பமுறையொழுங்கு பற்றி சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 8 (1) பிரிவின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விசாரணையை நடத்துகிற அதிகாரி செயற்படவேண்டியது எவ்வாறென்பதை நீதிமன்றம் அவ்வப்போது விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளமை காணப்படுகிறது. உரிய வழக்குகளின் தீர்ப்புகளின் துணையோடு இதுபற்றி ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**5.** சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பிரதி சுங்க பணிப்பாளர் ஒருவரால் நடாத்தப்படுகிற விசாரணையொன்றின் போது வழக்கை நெறிப்படுத்தும் அதிகாரியால் சரியான வித்தில் சாட்சி நெறிப்படுத்தப்பட வேண்டும் இங்கு மேற்குறிப்பிட்ட அதிகாரி பின்பற்ற வேண்டிய சட்டவிதிகள் மற்றும் சாட்சிகளை நெறிப்படுத்துகிற செயலொழுங்குளை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**6.** முறைசார்ந்த சுங்க விசாரணையொன்றின் பின்னர், சட்டவிரோத பொருட்கள் அரச உடைமையாக்குதல்களுக்கு உட்படுத்தப்படும். பாதிக்கப்பட்டவர் அதற்கெதிராக பரிகாரமொன்றை பெறுதல் பற்றிய நடைமுறைகள் பிரிவு 154 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கிணங்க 154 ஆம் பிரிவை விளக்குக. *(20 புள்ளிகள்)*

*[பக். 2 ஐப் பார்க்க.*

7. துபாயிலிருந்து சட்ட விரோத முறையில் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட போலி சிகரெட்தொகையொன்று சுங்கத்திணைக்களத்தினால் அரசுடைமையாக்கப்பட்டதோடு சந்தேகத்துக்குரியவர்களுக்கு 1.5 மில்லியன் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. சுங்கக் கட்டளைச் சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகளுக்கிணங்க இச் சந்தேக நபர்கள் செலுத்த வேண்டுமென விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை (Penalty) அறவிடுவது தொடர்பாக கடனை மீள அறவிடுதல் கட்டளைச்சட்டத்தின் துணையோடு எடுத்துக்காட்டி சட்ட நடவடிக்கையை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

8. கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள நிவாரண அலுவலகத்தின் அதிகாரியாக நீங்கள் பணிபுரியும் சந்தர்ப்பமொன்றில் வெளிவாரி தனியாள் ஒற்றர் ஒருவர் வந்து ஒருகொட வத்தையில் அமைந்துள்ள கிரேலயின் சுங்கச் செயற்பிரிவில் சட்ட விரோதமான விதத்தில் வெளியேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற மருந்துப் பொருட்கள் தொகையொன்றுடன் அடைக்கப்பட்ட கொள்கலன் பற்றி முழுமைபெறாத தகவல் ஒன்றைத் தருகின்றார். அவரிடமிருந்து மேற்குறிப்பிட்ட வேவுதகவலை பதிவுசெய்து கொள்கிற நடைமுறையையும் மற்றும் பின்னைய காலத்தில் அதற்காக ஒற்றருக்கு பரிசுப்பணம் செலுத்த வேண்டியேற்படின் அதன்பொருட்டு பின்பற்றப்படுகிற செயலொழுங்குகளில், சுங்க சட்டத்தின் நடைமுறைகள் மற்றும் அதற்கான திணைக்கள ஆணை ஆகியவற்றின் உதவியுடன் விளக்குக. *(20 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**II ஆம் தர உதவி சுங்க அத்தியட்சகர்களுக்காக நடைபெறும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (புதிய பாடத்திட்டம்) - 2017 (II) (2018)**

Second Efficiency Bar Examination for Assistant Superintendents of Customs Grade II (New Syllabus) - 2017 (II) (2018)

**(02)** - சுங்க நடைமுறைகள்

Customs Procedure

மூன்று மணித்தியாலம்
Three hours

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

**1.** கீழே காட்டப்படும் தலைப்புகளில் **நான்கினைப்** பற்றி சுருக்கக்குறிப்பு எழுதுக.
(i) இறக்குமதி நுழைவுப் பத்திரம் (Import Bill of Entry)
(ii) கப்பலேற்றுப் பத்திரம் (Bill of Lading)
(iii) பொருட்கள் தரையிறக்கல் அனுமதிப்பத்திரம் (Sufferance)
(iv) கடைசி துறைமுக சான்றிதழ் (Last Port Clearance)
(v) துறைமுக நுழைவு அனுமதிப்பத்திரம் (Harbour Gate Pass) *(05 × 4 = 20 புள்ளிகள்)*

**2.** கட்டுநாயக்க வான்பொருட்கள் நிலையத்தில் இறக்குமதிப் பிரிவில் சேவைபுரியும் உதவி சுங்க அதிகாரிகளின் உத்தியோகக் கடமைகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**3.** கட்டுநாயக்க விமானநிலையத்தில் உள்ள தீர்வைவரியற்ற வர்த்தகக் கடையில் விற்பனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபான வகைகள் அடங்கிய கொள்கலன் ஒன்று கொழும்புத் துறைமுகத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. அக்கொள்கலனை கொழும்புத் துறைமுகத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் வரைக்கும் கொண்டு வருவதற்கான (Feeder bond) உரிய தடைநீக்கல் செயலொழுங்கில் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பல்வித பிரிவுகளில் பணி புரியும் உதவி சுங்க அதிகாரிகளின் உத்தியோகக் கடமைகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**4.** அனைத்து இறக்குமதிப் பொருள்களும் சரியான தீர்வைவரி அறவிடப்படுதலுக்கான ஒத்திசை முறைமை வகைப்படுத்தலின் கீழ் வகைப்படுத்தப்படல் வேண்டும். உரிய நியதிகளுக்கேற்ற விதத்தில் அவ்வாறு வகைப்படுத்த வேண்டிய முறையை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**5.** எம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தைக்கப்பட்ட ஆடைகளடங்கிய கொள்கலன் ஒன்று திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இக்கொள்கலனை தடைநீக்கி விடுவிப்பதற்காக உரிய நிறுவனம் கடைபிடிக்க வேண்டிய தடைநீக்கல் செயன்முறையை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**6.** வணிக அளவிலான தைக்கப்பட்ட ஆடைகள், மருந்து வகைகள், வாசனைத் தைலங்கள், கைத்தொலைபேசிகள் அடங்கிய பயணப்பொதி உடன் இலங்கையரான பயணியொருவர் இந்தியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்துள்ளார். அப்பயணி பயணப்பொருட்கள் வெளிப்படுத்தல் பத்திரத்துடன் சிவப்பு கடமையிலீடுபட்டுள்ள உதவி கட்டண அதிகாரிக்கு பொருட்கள் பொதிகளை முன்வைத்துள்ளார். உதவி கட்டண அதிகாரியின் கடமைகளை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**7.** பல்வகை மாதிரிகளிலான வீட்டு மின் உபகரணங்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று க்ரேலயின் கொள்கலன் பரிசோதனை பிரிவுக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. அதனோடு சம்பந்தப்பட்ட சுங்கக் குறிப்புகளில் உரிய பொருட்களின் நியம விலை பரிசோதனை பிரிவுக்கு முன்வைக்கப்பட்டு அனுமதியைப் பெறுதவற்காக குறிப்பு இடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொருட்கள் பரிசோதனைப் பிரிவில் மற்றும் விலை பரிசோதனைப் பிரிவில் கடமையிலீடுபட்டுள்ள உதவி சுங்க அதிகாரிகளின் கடமைப் பொறுப்புகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**8.** பின்வரும் சேவை நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உதவி சுங்க அதிகாரிகளுக்குரிய கடமைகளை விபரிக்குக.
(i) இலங்கை சுங்கத் திணைக்களத்தின் நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவு (Consumer Protection Unit)
(ii) உயர் அபாய அவதானிப்புப் பொருட்கள் பரிசோதனைப் பிரிவு (High Risk Cargo Unit)
(iii) கைவிடப்பட்ட பொருட்கள் பிரிவு (Abandoned Cargo Unit)
(iv) பயணிகள் உடன்கொண்டுவராத பொருட்கள் குதம் (Unaccompanied Passanger Baggage Warehouse)

*(05 × 4 = 20 புள்ளிகள்)*

***